**Dated : 04.06.2025**

**O.S.No. 361/2022**

**DW.2 – திரு. பாஸ்கர்**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி :**

TRR Automotive நிறுவனத்தில் நான் JCB வாங்கினேனா என்றால் வாங்கினேன். அதனுடைய எண். என்ன என்றால் JCB–205–SC–NXT. மேற்சொன்ன மாடல் வாகனத்தை தான் நான் வாங்கியிருக்கிறேனா என்றால் ஆமாம். அதற்குண்டான Invoice தற்போது என்னிடம் காட்டப்படுவது தானா என்றால் ஆமாம், அந்த Invoice–ஐ ஆன்லைன் மூலமாக யார் வேண்டுமென்றாலும் எடுத்துக்கொள்ளலாம். இந்த ஆவணம் ஆன்லைன் மூலமாக பெறப்பட்ட ஆவணம் ஆகும், அது வா.சா.ஆ.3 ஆக குறுக்கு விசாரணையில் குறியிடப்படுகிறது. தாவா புரோநோட்டை எழுதியது வாதியின் அண்ணன் மோகன் ஆவார். அதில் சாட்சி கையொப்பமிட்டிருப்பவர் மோகனின் மாமா சந்திரசேகர். தாவா புரோநோட்டு மோசடியாக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று நான் கூறியிருப்பது தவறானது என்றால் சரியல்ல. JCB வாகனம் வாங்குவதற்காக ரூ.10.00 இலட்சம் என்னுடைய தகப்பனாரின் பெயரில் புரோநோட்டு எழுதி கொடுத்து கடன் வாங்கப்பட்டுள்ளது என்று சொன்னால் கடன் வாங்கப்படவில்லை.

டாடா மோட்டார்ஸில் வண்டியை அடமானம் வைத்து கடன் வாங்கினோம் என்றால் சரிதான். அதற்குண்டான தொகையினை செலுத்த இயலாத காரணத்தினால் வண்டியை பறிமுதல் செய்து எடுத்து சென்றுவிட்டார். வாகனம் வாங்குவதற்கு முன்னர் ரூபாய் பத்து இலட்சத்தை வாதியிடமிருந்து தாவா புரோநோட்டை எழுதி கொடுத்து கடன் வாங்கினோம் என்று சொன்னால் சரியல்ல, கடன் எதுவும் வாங்கவில்லை. அந்த வாங்கிய கடனை செலுத்தாத காரணத்தினால் தான் வாதியிடம் ரூபாய் பத்து இலட்சம் கடன் வாங்கவில்லை என்றும், என்னுடைய தகப்பனாரான பிரதிவாதி கிருஷ்ணன் என்பவர் புரோநோட்டை எழுதி கொடுக்கவில்லை என்றும், அவர் கையொப்பம் போடவில்லை என்றும், தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சாட்சி தாமே கூறுகிறார் அருண்காந்தி, மோகன், சந்திரசேகரன் ஆகிய மூவரும் 80 வயதான என்னுடைய தகப்பனாரிடமிருந்து நிலத்தை அபகரிக்கும் நோக்கத்துடன் அவர்களே புரோநோட்டை தயார் செய்து எழுதிக்கொண்டு சாட்சிகளையும் அவர்களே போட்டுக்கொண்டு ஆவணம் எழுதியிருக்கிறார்கள்.

என் தகப்பனாருக்கு 80 வயது என்று தற்போது நீதிமன்றத்தில் கூறுகிறேன், என்னுடைய வாக்குமூலத்தில் என் தகப்பனாருக்கு 74 வயது என்று குறிப்பிட்டிருக்கிறேன், இதில் எது உண்மை என்றால் 74 வயது என்பது உண்மை. வாதியோ, வாதியின் அண்ணன் மோகனோ, சாட்சி சந்திரசேகர் என்பவரோ எங்களுடைய நிலத்தில் எந்த உரிமையோ, பாத்தியத்தையோ கோரவில்லை என்றால், இல்லை, அவர்கள் எங்கள் நிலத்தை விலைக்கு கேட்டார்கள். நாங்கள் கொடுக்க மறுத்ததால் தற்போது வந்து செல்வதை தடை செய்கிறார்கள். சாட்சி மீண்டும் கூறுகிறார் எங்கள் நிலத்தின் வழியாக தான் அவர்கள் செல்கிறார்கள். எங்கள் நிலத்தை வாங்குவதற்கு சந்திரசேகருக்கு எந்தவிதமான எண்ணமும் இல்லை, அவர் விலைக்கும் கேட்கவில்லை என்றால் இல்லை அவர்கள் எங்களை கேட்டார்கள். சாட்சி தாமே கூறுகிறார் அவர் நிலத்தை வாங்க பிளான் செய்கிறார். நிலத்தை வாங்க அவர் பிளான் செய்தார் என்ற சங்கதி பொய்யானது என்றால் சரியல்ல. வாங்கிய பணத்தை திருப்பி கொடுக்க கூடாது என்பதற்காக நான் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open Court interpreted/read to the witness and acknowledged by him/her to be correct.

LATHA V R — Digitally signed by LATHA V R

Principal District Judge,
Krishnagiri.